1979 மார்ச் 19] [பேரவைத் தலைவர்]

எனவே, ''கூச்சல் குழப்பத்திற்கிடையே பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் உத்தரவிட்டது தாங்கள் கேட்க முடிய வில்லை'' என்று பத்திரிகைகளின் ஆசிரியர்கள் குறிப்பிட்டிருப்பது ஏற்கக் கூடியதாக இல்லை. அவ்வாறு கேட்க முடியாமற் போயிருந்தாலும், அவையில் ஏற்பட்ட குழப்பத்தினைப் பயன் படுத்திக் கொண்டு, பேரவைத் தலைவரின் தீர்ப்பு தங்களுக்கு கேட்கவில்லை என்று கூறுவது சரியல்ல. அவைத் தலைவரின் தீர்ப்பு விளக்கமாக இல்லை, அல்லது பத்திரிகை நிருபர்களுக்கு கேட்கவில்லை என்றால், அந்த நிருபர்கள் அவைத் தலைவரையோ அல்லது பேரவைச் செயலாளரையோ அணுகி பேரவைத் தலைவரின் தீர்ப்பு குறித்துத் தேவையான விளக்கம் பெறவேண்டும். பேரவையின் நடவடிக்கைகளைச் சரியானபடி வெளியிடுவதற்கு இவ்வாறு செய்வது அந்த நிருபர்களுடைய கடமையாகும். மேலும் பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் அன்று பேரவையைவிட்டு வெளியே போகும்போது, பல்வேறு பத்திரிகைகளைச் சேர்ந்த நிருபர்கள் அவரிடம் சென்று விளக்கம் கேட்டுள்ளனர். சில நிருபர்கள் செல்லவில்லை என்றால் அது அவர்களுடைய தவறு. பத்திரிகை நிருபர்கள் இம்மாதிரி நேரங்களில் அழைக்கப்படுவதில்லை. அவைத் தலைவர் தீர்ப்பு என்ன என்பதைத் தெரிந்துகொள்வது அவர்களது கடமை என்பதை மறுபடி வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

எனவே எழுப்பப்பட்ட பிரச்னையில் அவை உரிமை மீறல் இருக்கிறது என்றாலும். இதுவே முதல் முறையாக இருப் பதால், பத்திரிகை நிருபர்களை எச்சரித்துவிட்டு, மேற்கொண்டு எந்தவிதமான நடவடிக்கையும் இல்லாமல் இப்பிரச்சனையை முடித்துவிடலாம் என்று நான் கருதுகிறேன்.

[முற்பகல் 10-20]

(ஆ) மின்சாரத்துறை அமைச்சர் மீது—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை உரிமை மீறல் குறித்த பிரச்னை. நேற்றைய முன்தினம் 17—3—79 அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்களும் திரு. உமாநாத் அவர்களும் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களின் மீது ஒரு அவை உரிமை மீறல் குறித்த பிரச்னையை அவையில் எழுப்பினார்கள். இது குறித்து மாண்புமிகு மின்சராத்துறை அமைச்சர் அவர்களும் தம் விளக்கத்தை அளித்துள்ளார்கள். இதன் மீது என் தீர்ப்பை இன்று வழங்குவதாக நான் அறிவித்தி ருந்தேன்.

ஒரு குறிப்பிட்ட பிரச்னையில் வழக்குரைஞர்கள் சங்கம் தம் இசைவை அளித்தது, அல்லது அந்தச் சங்கத்தை கேட்டு, அதன் கருத்தை அறிந்து அரசு முடிவு செய்தது என்று மாண்புமிகு அமைச்சர் 'வர்கள் அறிவித்தார்கள் என்றும்,

ஆனால் வழக்குரைஞர்கள் சங்கம் தாங்கள் சம்மதம் அளிக்கவில்லை என்று கூறுவதாகவும், திரு. உமாநாத் அவர்களும் திரு. சுப்பு அவர்களும் குறிப்பிட்டு, எனவே அமைச்சர் அவர்கள் பேரவைக்குத் தவறான தகவலைத் தந்தார்கள் என்று குறிப்பிட்டார்கள்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தம் விளக்கத்தில், தாம் வழக்கறிஞர் சங்கங்களை கலந்துகொண்டதாகவோ அல்லது அவர்கள் சம்மதத்தைப் பெற்றதாகவோ கூறவில்லை என்றும், அச்சங்கத்தின் ஒரு பொறுப்புள்ளவர் முதல்வரின் தனிச் செயலரிடம் இசைவு அளித்ததையே, வழக்கறிஞர்களை கலந்து கொண்டு என்று தான் அவையில் அறிவித்தாகவும் கூறினார்கள்.

பேரவைக்குத் தரப்படும் தவறான செய்தியை, தவறு என்று தெரிந்திருந்தும், வேண்டுமென்றே அவையைத் திசை திருப்பும் எண்ணத்துடன் அத்தவறான செய்தி சொல்லப்பட்டால்தான் அது அவை உரிமை மீறிய செயல் ஆகும். மாண்புமிகு அமைச்சரின் விளக்கத்திலிருந்து, அவர் தவறான செய்தியை தவறு என்று அறிந்திருந்தும் அவைக்கு அளித்தார் என்று கொள்வதற்கில்லை. அப்படி அவர் அளித்தார் என்பதற்கான எந்தவித ஆதாரமும், இப்பிரச்னையை எழுப்பிய உறுப்பினர்களால் கொடுக்கப்படவும் இல்லை. எனவே, இப்பிரச்னையில் மெலெழுந்தவாரியாகக் கூட அவை உரிமை மீறல் எதுவும் எழவில்லை என்று தீர்ப்பளிக்கிறேன்,

2. தகவல் கோரல்—(தொடர்ச்சி)

(இ) உறுப்பினர்கள் கொடுத்த பிரச்னைகள் எடுத்துக் கொள்வது குறித்து

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இன்னொரு உரிமைப் பிரச்னை நீண்டகாலமாக எடுக்கப்படாமல் இருக்கிறது. அது என்றைக்கு வரும்? மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மீது நான் இங்கு எழுப்பிய உரிமைப் பிரச்னை அது..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது இன்னும் இரண்டு நாட்களில் கொண்டு வரப்படும்.

திரு. பி. எச். பாண்டியன் : தலைவர் அவர்களே, நானும் ஒரு....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள், ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்ளலாம்.